பதிப்புரிமை ஆசிரியருக்கே / *All Rights to Author*

GEOGRAPHY EXAMINATION

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) அலகுப் பரீட்சை - சுற்றுலாக் கைத்தொழில்
**General Cerificate of Education (Adv. Level) Unit Examination - Tourism**

புதிய பாடத்திட்டம் *New Syllabus*

புவியியல் I,II
Geography I,II

22 T I,II

# இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழில்

*இரண்டு முப்பது மணித்தியாலம்*
*Two thirty hours*

ஆசிரியர்: திரு.ஏ.கஜன் B.A
077 2400 707 / 076 8044 959

சுட்டெண்: ..................................................

**அறிவுறுத்தல்கள்:**

- இவ் வினாத்தாள் **இரண்டு** பகுதிகளைக் கொண்டது. **பகுதி I, 20** பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. **பகுதி I** இற்கான விடைகள் இவ் வினாத்தாளிலேயே எழுதப்படுதல் வேண்டும். ஒவ்வொரு சரியான விடைக்கும் **ஒரு** புள்ளி வழங்கப்படும்.
- **பென்சிலால் எழுதப்படும் விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**
- அறிவுறுத்தலுக்கு அமைவாகப் **பகுதி II** வினாக்களுக்கு விடையளிக்குக.

பகுதி **I** மொத்தப் புள்ளிகள்

பகுதி **II** மொத்தப் புள்ளிகள்

இறுதிப் புள்ளிகள் **100**

## பகுதி / Part - I

- **1 – 20 வரையான ஒவ்வொரு வினாக்களிலும் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து விடையின் இலக்கத்தை அதன் அருகிலுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.**

**1.** இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழிலின் மானிட அடிப்படைகளில் ஒன்றாகக் **கொள்ள முடியாதது**.
(i) கலையம்சங்கள் (iii) வசீகரிக்கும் இடங்கள்
(ii) சுதேச வைத்திய சேவைகள் (iv) விருந்தினர் நலநோம்பு

**2.** இலங்கை சுற்றுலா சபையின் மூலம் அடையாளம் செய்யப்பட்டுள்ள பிரதான சுற்றுலா வலயங்களது **எண்ணிக்கை.**
(i) **05** (iii) **07**
(ii) **06** (iv) **08**

**3.** **2019** இல் இலங்கைக்கு வருகைதந்த சுற்றுலாப் பயணிகளின் **மொத்த** எண்ணிக்கை.
(i) **1,913,702** பேர் (iii) **2,578,739** பேர்
(ii) **1,910,430** பேர் (iv) **1,821,710** பேர்

**4.** **2019** மற்றும் **2020**ஆம் ஆண்டுகளில் இலங்கையை நோக்கி அதிகளவிலான சுற்றுலாப் பயணிகள் வருகைதந்த / வருகைதரும் நாடு.
(i) ஐக்கிய இராச்சியம் (iii) சீனா
(ii) ஜேர்மனி (iv) இந்தியா

**5.** இலங்கை சுற்றுலா சபை நிறுவப்பட்ட ஆண்டு.
(i) **1966** (iii) **1937**
(ii) **1958** (iv) **1969**

**6.** **2019** இல் இலங்கைக்கு அதிகளவு சுற்றுலாப் பயணிகள் வருகைதந்த நாடுகளை **இறங்குவரிசை**யில் தரும் விடை.
(i) இந்தியா, பிரித்தானியா, ஜேர்மனி, ரஸ்யா (iii) இந்தியா, பிரித்தானியா, ஜேர்மனி, பிரான்ஸ்
(ii) இந்தியா, ஐக்கிய இராச்சியம், சீனா,ஜேர்மனி (iv) பிரித்தானியா, சீனா, ஜேர்மனி, ரஷ்யா

**7.** **2018**ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், **2019** ஆம் ஆண்டு இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளது எண்ணிக்கை எத்தனை சதவீதத்தினால் வீழ்ச்சிகண்டது?
(i) **14.3%** (iii) **17.1%**
(ii) **16.5%** (iv) **18.0%**

**8.** சுற்றுலாப் பயணக் கைத்தொழிலின் மூலமாக **2019** இல் இலங்கை அரசாங்கம் ஈட்டிக்கொண்ட வருவாய்.
(i) **5.3** பில்லியன் அமெரிக்க டொலர்கள் (iii) **3.6** பில்லியன் அமெரிக்க டொலர்கள்
(ii) **2.33** பில்லியன் அமெரிக்க டொலர்கள் (iv) **7.2** பில்லியன் அமெரிக்க டொலர்கள்

**9.** இலங்கைக்கு அதிக அந்நியச் செலாவனியை ஈட்டித் தரும் தொழிற்துறைகளில், சுற்றுலாத் துறை பெறும் இடம்.
(i) ஒன்று (iii) இரண்டு
(ii) மூன்று (iv) நான்கு

**10.** பின்வருவனவற்றுள் உயிரினச் சூழல் சார்ந்த சுற்றுலா மையமாகக் **கொள்ளமுடியாதது.**
(i) பின்னவல (iii) சிகிரியா
(ii) வில்பத்து (iv) யால

**11.** பின்வருவளனவற்றுள், சுற்றுலாக் கைத்தொழில் மூலமாகச் சமூக மற்றும் கலாசார ரீதியில் ஏற்படும் **பாதகமான** தாக்கங்களாகக் கொள்ள **முடியாதன**வற்றை உள்ளடக்கிய விடை.
(i) போதைப்பொருள் பாவனை அதிகரிப்பு, ஒழுக்க சீர்கேடு உயர்வடைதல்.
(ii) சமூக நோய்கள் பரவுதல், சிறுவர் துஸ்பிரயோகம் அதிகரித்தல்.
(iii) சமய காலாசர பெறுமதிமிக்க பொருட்கள் களவாடப்படல், ஒழுக்க சீர்கேடு உயர்வடைதல்.
(iv) சமூக கலாசாரப் பெறுமானங்களின் பரிமாற்றம், வெளிநாட்டு மொழிகளைக் கற்பதற்கான வாய்ப்பு.

**12.** நாட்டுக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவரும் விலங்கியற் பூங்கா காணப்படும் இடம்.
(i) பேராதனை (iii) ஹக்கல
(ii) தெஹிவளை (iv) ஹெனரத்கொட

**13.** **2020** மார்ச் மாத காலப் பகுதியில் இலங்கைக்கு அதிகளவு வருகைதந்த சுற்றுலாப் பயணிகளை, வலய ரீதியாக **இறங்குவரிசை**யில் தரும் விடை.
(i) ஆசியா – பசுபிக், ஐரோப்பா, அமெரிக்கா, மத்திய கிழக்கு
(ii) ஐரோப்பா, ஆசியா – பசுபிக், அமெரிக்கா, மத்திய கிழக்கு
(iii) ஐரோப்பா, ஆசியா – பசுபிக், அமெரிக்கா, ஆபிரிக்கா
(iv) ஆசியா – பசுபிக், ஐரோப்பா, அமெரிக்கா, ஆபிரிக்கா

**14.** **2020**ஆம் ஆண்டின் முதல் மூன்று மாத காலப் பகுதியில், இலங்கைக்கு அதிகளவு சுற்றுலாப் பயணிகள் வருகைதந்த முதல் **ஐந்து** நாடுகளின் தரவரிசையில் உள்ளடங்கும், ஐரோப்பிய நாடுகளின் தொகுதி.
(i) ஜேர்மனி, பிரான்ஸ், பிரித்தானியா
(ii) கனடா, பிரித்தானியா, சுவிஸர்லாந்து
(iii) ரஷ்யா, பிரான்ஸ், பிரித்தானியா
(iv) கனடா, பிரித்தானியா, நோர்வே

**15.** பின்வருவனவற்றுள், சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவரும் பறவைகள் சரணாலயம் **அமைந்திராத** பகுதி.
(i) சுண்டிக்குளம் (iii) குமண
(ii) புந்தல (iv) வங்காலை

**16.** இலங்கையின் வட பகுதியில், குதிரைகள் சரணாலயம் அமையப்பெற்றுள்ள இடம்.
(i) சுண்டிக்குளம் (iii) நாகர்கோவில்
(ii) வங்காலை (iv) நெடுந்தீவு

**17.** வரலாற்றோடு தொடர்புபட்ட சுற்றுலாத்துறைக் கைத்தொழில் விருத்தி பெற்றுள்ள கலாசார முக்கோணமாக விளங்கும் மாவட்டங்களாவன.
(i) அனுராதபுரம், குருநாகல், நுவரெலியா (iii) அனுராதபுரம், மன்னார், பொலநறுவை
(ii) பொலநறுவை, கண்டி, அனுராதபுரம் (iv) குருநால், கண்டி, யாழ்ப்பாணம்

A.Kajan

**18.** **2019** ஏப்ரல் - நவம்பர் வரையான காலப் பகுதியில், இலங்கையின் சுற்றுலாத்துறையின் வீழ்ச்சிக்குக் காரணமான நிகழ்வு.
(i) இயற்கை அனர்த்தம் (iii) பயங்கரவாதத் தாக்குதல்
(ii) காலநிலை மாற்றம் (iv) அரசியல் ஸ்திரத்தன்மை

**19.** **2020** மார்ச் மாதத்தில் இலங்கைக்கு அதிக சுற்றுலாப் பயணிகள் வருகைதந்த கிழக்காசிய நாடுகளின் தொகுதி.
(i) சீனா, ஜப்பான், தென்கொரியா, தாய்வான்
(ii) கம்போடியா, இந்தோனேசியா, மலேசியா, மியன்மார்
(iii) ஆப்கானிஸ்தான், பங்காதேஷ், பூட்டான், இந்தியா
(iv) சீனா, தென்கொரியா, ஜப்பான், இந்தியா

**20.** **2018** இல் சர்வதேச அளவில் மேற்கொள்ளப்பட்ட சுற்றுலாசார் அம்சங்கள் அடங்கிய நாடுகளின் பட்டியலில், இலங்கை பெற்றுக்கொண்ட இடம்.
(i) பதின்மூன்று (iii) பதினொன்று
(ii) பன்னிரெண்டு (iv) பத்து

-A.Kajan

## பகுதி / Part – II

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**01.** **1)** '**சுற்றுலா**' என்பதை வரையறை செய்க.
**2)** இலங்கையின் சுற்றுலாவின் பிரிவுகள் எவையேனும் **நான்கினைச்** சுருக்கமாக விவரிக்குக.
**3)** இலங்கைக்கு அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதற்கான காரணங்கள் **மூன்றினைச்** சுருக்கமாக விளக்குக.
**4)** இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழிலுடன் தொடர்புபட்ட **நான்கு** அண்மைக்காலப் போக்குகளைச் சுருக்கமாக ஆராய்க. **(20 புள்ளிகள்)**

A.Kajan

**02.** **1)** சுற்றுலாக் கைத்தொழிலின் **பிரதான** அடிப்படை அம்சங்களை அடையாளம் செய்க.
**2)** இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழிலின் புதிய பரப்புகள் தொடர்பில் கருத்துரைக்குக.
**3)** சுற்றுலாப் பயணக் கைத்தொழிலை விருத்தி செய்வதற்கு இலங்கை அரசாங்கம் முன்னெடுத்துவரும் **நான்கு** நடவடிக்கைகளை விவரிக்குக.
**4)** இலங்கையின் சுற்றுலாப் பயணக் கைத்தொழிலின் தாக்கங்களை பின்வரும் தலைப்புகளின் கீழ் ஆராய்க.
(அ) பொருளாதாரத் தாக்கம்
(ஆ) சமூக கலாசாரத் தாக்கம் **(20 புள்ளிகள்)**

**03.** **1)** இலங்கை சுற்றுலா சபையினால் அடையாளம் செய்யப்பட்டுள்ள சுற்றுலா வலயங்களுள், **எவையேனும்** நான்கினைப் பெயரிடுக.
**2)** உலக சுற்றுலா அமைப்புகளுடன், இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழில் தொடர்புபடுமாற்றினைச் சுருக்கமாக விளக்குக.
**3)** அண்மைக் காலத்தில் இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழிலின் வீழ்ச்சிக்குக் காரணமான **இரண்டு** விடயங்களைக் குறிப்பிட்டு, அவற்றினால் இலங்கையின் பொருளாதாரத் துறையில் ஏற்பட்டுள்ள சரிவு நிலையைப் பொருத்தமான புள்ளிவிபரங்களின் துணையுடன் ஆராய்க.
**4)** சுற்றுலாத் துறையின் பாதகமான விளைவுகளிலிருந்து மீள்வதற்கு, வலுப்படுத்திக்கொள்ள வேண்டிய **நான்கு** நடவடிக்கைகளைப் பரிசீலிக்குக. **(20 புள்ளிகள்)**

## பகுதி I விடைகள்

| வினா இல | விடை இல | வினா இல | விடை இல |
|---|---|---|---|
| 1 | iii | 11 | iv |
| 2 | iii | 12 | ii |
| 3 | i | 13 | ii |
| 4 | iv | 14 | i |
| 5 | i | 15 | ii |
| 6 | ii | 16 | iv |
| 7 | iv | 17 | ii |
| 8 | iii | 18 | iii |
| 9 | ii | 19 | i |
| 10 | iii | 20 | i |

A.Kajan - - A.Kajan